அரசியல் விஞ்ஞானம்

இரண்டாம் குடியரசு அரசியலமைப்பு-1978

விகிதாசார பிரதிநிதித்துவம்

தி/மு/முதூர் மத்திய கல்லூரி
தேசிய பாடசாலை

B.M.Sabry B.A(Hons)
Politics & Peace Studies

www.ikoolu.lk

B.M.Sabry B.A.(Hons)
Politics & Peace Studies
T/Mu/Mutur Central College (N.S)

விகிதாசாரப் பிரதிநிதித்துவம் (P.R System) – (*1978 ஆம் ஆண்டைய இரண்டாம் குடியரசு அரசியல்திட்டம்)*

அறிமுகம்

இலங்கையின் 1978 ஆம் ஆண்டைய இரண்டாம் குடியரசு அரசியல் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட முக்கிய அம்சங்களுள் ஒன்று விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறையாகும். இதன் மூலம் முன்னர் காணப்பட்ட சார்பு ரீதியான பெரும்பான்மைத் தேர்தல் முறை நீக்கப்பட்டது. விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறை என்பது ஒரு குறிப்பிட்ட தேர்தலில் அரசியல் கட்சிகள் அல்லது சுயேட்சைக் குழுக்கள் பெற்றுக் கொண்ட வாக்குகளின் விகிதாசாரத்திற்கு ஏற்ப அக்கட்சிகளுக்கு அல்லது சுயேட்சைக் குழுக்களுக்கு ஆசனங்களை ஒதுக்கீடு செய்யும் முறையாகும். அரசியல் உறுதிப்பாட்டினை ஏற்படுத்துவதற்கு உதவும் என்றவகையில் 1977 ஆம் ஆண்டில் பதவிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் இம்முறையினை அரசியல் திட்டத்தில் அறிமுகம் செய்தது. இதன்படி இம்முறையின் கீழமைந்த பட்டியல் முறை இலங்கையின் பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இம்முறை அறிமுகப்படுத்தப்பட்டமைக்கான காரணங்கள்

இரண்டாம் குடியரசு அரசியல் திட்டத்தின் கீழ் இலங்கையின் அரசியல் பரப்பில் விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்டமைக்கு பின்வரும் இரு காரணங்கள் பிரதானமாகக் கூறப்படுகின்றன.

1. நடைமுறையில் இருந்த தொகுதிவாரிப் பிரதிநிதித்துவ தேர்தல் முறையின் குறைபாடுகள்

இலங்கையில் அச்சமயம் நடைமுறையில் இருந்த தொகுதிவாரிப் பிரதிநிதித்துவ முறையானது பல்வேறு குறைபாடுகளைக் கொண்டிருந்தது. இக்குறைபாடுகளுள் சில குறைபாடுகள் தொகுதிவாரிப் பிரதிநிதித்துவ முறையின் பொதுவான குறைபாடுகளாகும். சில குறைபாடுகள் இலங்கையோடு தொடர்பான குறைபாடுகளாகும். இதன்படி இப்பிரதிநிதித்துவ முறையின் கீழ் தேர்தல் தொகுதிப் பிரிப்பானது சமத்துவ அடிப்படையில் அமையப் பெற்றிருக்கவில்லை (சனத்தொகை, நிலப்பரப்பு வித்தியாசம்) என்பதுடன் பெரும்பான்மை வாக்காளர் விரும்பாத ஒருவர் கூட பிரதிநிதியாகத் தெரிவாகக் கூடிய நிலை காணப்பட்டது. இலங்கையில் இம்முறை அமுலில் இருந்த கால கட்டத்தில் தேசிய ரீதியில் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்ற கட்சி நாட்டின் தேசிய சட்டசபையில் பெரும்பான்மை ஆசனங்களைப் பெறமுடியாத நிலை ஏற்பட்டிருந்தது. இது ஐக்கிய தேசியக் கட்சியினை 1970 ஆம் ஆண்டைய தேர்தலில் அதிகளவில் பாதித்திருந்தது என்பதனை பின்வரும் தேர்தல் முடிவு வெளிக்காட்டுகின்றது.

உதாரணம் - 1970 ஆண்டைய தேர்தல்

- ஐக்கிய தேசியக் கட்சி 38% வாக்குகள் - 17 ஆசனங்கள்
- ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 37% வாக்குகள் - 91 ஆசனங்கள்

2. ஆட்சியில் தொடர்ந்தும் இருப்பதற்கான ஐக்கிய தேசியக் கட்சியின் விருப்பம்

ஐக்கிய தேசியக் கட்சி நீண்ட காலமாக திறந்த பொருளாதாரக் கொள்கையினை இலங்கையில் அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்த்தது. அக்கொள்கையின் செயற்பாட்டுக்கு அரசியல் உறுதிப்பாடு இன்றியமையாததாகும். இவ்வுறுதிப்பாட்டை நிறைவேற்று ஜனாதிபதி முறை, விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை ஆகிய இரண்டின் ஊடாக ஐக்கிய தேசியக் கட்சி எதிர்பார்த்தது. அதேவளை தொகுதிவாரிப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றியடைந்த தேர்தல்களைத் தவிர, அது

தோல்வியடைந்த தேர்தல்களிலும் அக்கட்சியே அதிகளவான வாக்குகளைப் பெற்றிருந்தது. எனவேதான் வாக்குகளின் விகிதாசாரத்திற்கு ஏற்ப ஆசனங்களை ஒதுக்கீடு செய்யும் ஒரு முறையினைக் கொண்டுவருவதன் மூலம் தாம் தொடர்ந்தும் ஆட்சியில் அமர முடியும் என ஐக்கிய தேசியக் கட்சி எதிர்பார்த்தது.

தேர்தல் மாவட்டங்களை நிர்ணயம் செய்தல்

யாப்பின் 95(1) ஆம் சரத்துப்படி ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் தேர்தல் தொகுதி நிர்ணய ஆணைக்குழு தேர்தல் மாவட்டங்களைப் பிரிக்கும். இவ்வாணைக்குழு 3 உறுப்பினர்களைக் கொண்டிருக்கும். அவர்கள் அரசியலில் தீவிரமாக ஈடுபடாதவர்களாக இருக்க வேண்டும். அவர்களுள் ஒருவரை ஜனாதிபதி இவ்வாணைக் குழுவின் தலைவராக நியமித்தல் வேண்டும். யாப்பின் 96 ஆம் சரத்துப்படி இவ்வாணைக்குழு இலங்கையை 20 க்குக் குறையாததும் 24 க்கு மேற்படாதுமான தேர்தல் மாவட்டங்களாப் பிரித்து அம்மாவட்டங்களுக்குரிய பெயரைச் சூட்ட வேண்டும். இதன்படி 1980 களின் ஆரம்பத்திலிருந்து இலங்கை 22 தேர்தல் மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் கீழ் வவுனியா, மன்னார், முல்லைதீவு ஆகிய மாவட்டங்கள் வன்னி தேர்தல் மாவட்டமாகவும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்கள் யாழ் தேர்தல் மாவட்டமாகவும் வரையறை செய்யப்பட்டது.

தேர்தல் மாவட்டங்களுக்கு ஆசனங்களை ஒதுக்குதல்

இலங்கைப் பாராளுமன்றத்தின் மொத்த உறுப்பினர் தொகை 225 ஆகும். இவர்களுள் 29 பேர் நாடளாவிய ரீதியில் கட்சிகள், குழுக்கள் பெறும் வாக்குகளின் விகிதாசாரத்திற்கு ஏற்ப தேசியப்பட்டியலிருந்து நியமிக்கப்படுவர். எஞ்சிய 196 பேர் யாப்பின் 98(1) சரத்துக்கிணங்க 22 தேர்தல் மாவட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்படுவர். இவர்களுள் 36 பேர் ஒரு மாகாணத்திற்கு 4 பேர் வீதம் 9 மாகாணங்களுக்கும் பிரித்தளிக்கப்பட வேண்டும். மாகாணத்தில் உள்ள ஒவ்வொரு மாவட்டமும் இந்த நான்கில் ஒன்றையாவது பெற்றுக் கொள்ளும் வகையில் தேர்தல் தொகுதி நிர்ணய ஆணைக்குழு அந்தந்த மாவட்டங்களிடையே பிரித்தளிக்க வேண்டும். எஞ்சிய 160 ஆசனங்கள் தேசிய ரீதியாகக் கணிப்பிடப்படும் வாக்காளர் விகிதாசாரத்திற்கு இணங்க அந்தந்த தேர்தல் மாவட்டத்திற்கான உறுப்பினர் எண்ணிக்கை கணிப்பிடப்படுகின்றது. இதன்படி முழு நாட்டு வாக்காளர் தொகையும் 160 ஆல் வகுக்கப்பட வேண்டும். இவ்வாறு வகுக்கும் போது கிடைக்கும் தொகையினை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு மாவட்டத்தினதும் வாக்காளர் தொகையினை வகுக்கும் போது கிடைக்கப்பெறும் எண்ணிக்கையினைக் கொண்டு மாவட்டத்திற்கான ஆசன எண்ணிக்கை கணிப்பிடப்படும்.

வேட்பாளர் பட்டியலைத் தயாரித்தல்

விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் பட்டியல் முறையின் கீழ் வேட்பாளர்கள் தனித்தனியாகப் போட்டியிட முடியாது. அரசியல் கட்சிகள் அல்லது சுயேட்சைக் குழுக்கள் அடங்கிய பட்டியலை தாக்கல் செய்தே போட்டியிட முடியும். இதன்படி இலங்கையின் ஒவ்வொரு மாவட்டத்திலும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள், சுயேட்சைக் குழுக்கள் வேட்பாளர்கள் அடங்கிய பட்டியலை குறித்த தேர்தலுக்கான வேட்புமனுத்தாக்கல் இறுதித் திகதி என தேர்தல் ஆணையாளர் அறிவித்த திகதிற்கு முன்னர் குறித்த மாவட்டத்தில் தமது வேட்பாளர்கள் அடங்கிய பட்டியலைத் தாக்கல் செய்தல் வேண்டும். வேட்பாளர்கள் அடங்கிய பட்டியலை கட்சிகள் அல்லது குழுக்கள் தயாரிக்கும் போது தாம் போட்டியிடத் தீர்மானித்திருக்கும் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட முடியுமான ஆசனங்களின் எண்ணிக்கையுடன் மூன்றினைக் கூட்டி பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும்.

உதாரணம் - தேர்தல் மாவட்டம் - ஓ, தெரிவு செய்யப்பட வேண்டிய உறுப்பினர்கள் தொகை – 5 இதற்கமைய இம்மாவட்டதிற்கான வேட்பாளர் பட்டியலைத் தயாரிக்கும் போது மூன்று உறுப்பினர்களின் பெயர்களினை அதிகப்படுத்தி மொத்தம் 8 பேர் அடங்கியதான வேட்பாளர் பட்டியல் தயார் செய்யப்பட வேண்டும்.

தயாரிக்கப்பட்ட வேட்பாளர் பட்டியலானது மாவட்டத்தின் தெரிவு அத்தாட்சி அதிகாரியிடம் சம்பந்தப்பட்ட கட்சியின் செயலாளரினால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு பிரதிநிதியினால் கையளிக்கப்படல் வேண்டும். ஒரு சுயேட்சைக் குழுவின் பட்டியல் ஒரு சமாதான நீதவானால் உறுதிப்படுத்தப்பட்டு அக்குழுவின் தலைவரினால் கையளிக்கப்பட வேண்டும். தயாரிக்கப்பட்ட வேட்பாளர் பட்டியலில் அடங்கும் வேட்பாளர்களுக்கான விருப்பத்தெரிவு இலக்கமானது சிங்கள அகரவரிசைக்கிணங்க வழங்கப்படும். வேட்பு மனுத்தாக்கல் செய்யும் போது உரிய நேரத்திற்கு முன்னர் சமர்ப்பிக்கப்படாத வேட்பு மனுக்கள், பூரணமாக நிரப்பப்படாத வேட்பு மனுக்கள் ஆகியன நிராகரிக்கப்படும்.

வாக்களித்தல்

பட்டியல் முறையில் அமைந்த ஒரு தேர்தல் முறையாக இலங்கையின் பாராளுமன்றப் பொதுத் தேர்தல் இருப்பதனால் இத்தேர்தலில் கட்சிக்கு வாக்களிக்கும் அதேவேளை அக்கட்சியில் தாம் விரும்பும் 3 வேட்பாளர்களுக்கும் தமது விருப்பு வாக்கினை வழங்க முடியும். எனினும் கட்சிக்கு மட்டும் வாக்களித்து வேட்பாளர்களுக்கு தமது விருப்பத் தெரிவினை வழங்காமல் விடுவதனால் வாக்குகள் நிராகரிக்கப்படுவதில்லை. அவ்வாறே கட்சிக்கு வாக்களித்து வேட்பாளர்களுள் ஒருவருக்கு அல்லது இருவருக்கு வாக்களித்தாலும் அவ்வாக்கு செல்லுபடியானதாகக் கருதப்படும். இதற்கு மாற்றமாக கட்சிகளுக்கு வாக்களிக்காமல் இலக்கங்களுக்குப் புள்ளடியிடும் போது அவ்வாறான வாக்குகள் நிராகரிக்கப்படும். அவ்வாறே இரு கட்சிகளுக்கு ஒரே வாக்குச் சீட்டில் புள்ளடியிடுவதன் மூலமும் வாக்குகள் நிராகரிக்கப்படும்.

வெற்றி பெறும் உறுப்பினர்களைத் தெரிவு செய்தல்

இலங்கையின் பாராளுமன்ற உறுப்பினர்கள் விகிதாசாரத் தேர்தல் முறையின் **பட்டியல் முறையின்** கீழ் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவர்களுள் 29 பேர் தேசியப் பட்டியல் மூலமும் 196 பேர் 22 தேர்தல் மாவட்டங்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவ்விதம் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு பின்வரும் நீண்ட நடைமுறை பின்பற்றப்படுகின்றது.

1. செல்லுபடியான வாக்குகளைக் கணித்தல்
2. தகுதிபெறும் கட்சிகளை, குழுக்களைத் தீர்மானித்தல்
3. இயைபான தொகை அல்லது தொடர்புடைய வாக்குகளைக் கணித்தல்
4. மாவட்டக் கோட்டாவைக் கணித்தல்
5. போனஸ் அல்லது மேலதிக ஆசனம் வழங்குதல்
6. கட்சிகளுக்கு அல்லது குழுக்களுக்கு ஆசனங்களைப் பகிர்தல் (முதல் அல்லது இரண்டாம் ஒதுக்கீடுகள்)
7. பெற்றி பெற்ற உறுப்பினர்களைத் தீர்மானித்தல்
8. தேசிய பட்டியல் ஆசனங்களை ஒதுக்குதல்

1. செல்லுபடியான வாக்குகள்

நிராகரிக்கப்பட்ட வாக்குகளை அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளிலிருந்து கழிப்பதன் மூலம் பெறப்படும் தொகையே செல்லுபடியான வாக்குகள் எனப்படும்.

2. தகுதிபேணும் கட்சிகளை அல்லது குழுக்களைத் தீர்மானித்தல்

குறிப்பிட்ட தேர்தல் மாவட்டத்தில் அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகளில் 5 வீதத்திற்குக் குறைவான வாக்குகளை பெற்ற கட்சிகள் அல்லது குழுக்கள் போட்டியில் இருந்து நீக்கப்படும். இத்தொகைக்குக் குறையாத வாக்குகளைப் பெறும் கட்சிகள், குழுக்கள் தகுதிபேணும் அரசியல் கட்சிகள் அல்லது சுயேட்சைக் குழுக்களாகக் கருதப்படும்.

3. தொடர்புடைய வாக்கு அல்லது இயைபான தொகை

செல்லுபடியான வாக்குகளிலிருந்து 5 வீதத்திற்குக் குறைவான வாக்குகளைப் பெற்ற கட்சிகள், குழுக்களின் வாக்குகளை மொத்த செல்லுபடியான வாக்குகளிலிருந்து கழிப்பதன் மூலம் பெறப்படும் தொகையே தொடர்புடைய வாக்கு அல்லது இயைபான வாக்குகளாகும்.

4. மாவட்டக் கோட்டா அல்லது விளைதொகை அல்லது முடிவான வாக்கு

மாவட்டத்தின் இயைபான அல்லது தொடர்புடைய வாக்குத் தொகையை, குறித்த தேர்தல் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட வேண்டிய ஆசனங்களின் எண்ணிக்கையிலிருந்து ஒன்றைக் கழிப்பதன் மூலம் வரும் எண்ணிக்கையினால் வகுப்பதன் மூலம் முடிவான வாக்குகள் (தகுதிகாண் வாக்குகள்) கணிப்பிடப்படும்.

5. போனஸ் அல்லது மேலதிக ஆசனம்

மாவட்டத்தில் கூடுதலான வாக்குத் தொகையினைப் பெற்றுக் கொள்ளும் அரசியல் கட்சி அல்லது குழுவுக்கு ஒரு மேலதிக ஆசனம் வழங்கப்படும். இது போனஸ் ஆசனம் என அழைக்கப்படும்.

6. கட்சிகள் அல்லது குழுக்களுக்கு ஆசனங்களை பகிர்ந்தளித்தல்

ஒவ்வொரு அரசியல் கட்சியும், சுயேட்சைக் குழுவும் பெற்றுக் கொண்ட மொத்த வாக்குகளை விளை தொகையால் (தகுதிகாண் வாக்குகள் அல்லது மாவட்ட கோட்டா) பிரிப்பதன் மூலம் அவற்றுக்குரிய ஆசனங்கள் ஒதுக்கப்படும். முதல் ஒதுக்கீட்டில் ஆசனங்கள் பூரணப்படுத்தப்படாதவிடத்து அதி கூடிய மீதி வாக்குகளின்படி எஞ்சிய ஆசனங்கள் நிரப்பப்படும். இங்கு மீதி வாக்கு என்பது தகுதிகாண் எண்ணினால் ஒவ்வொரு கட்சியும் குழுவும் பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கையினைப் பிரிக்கும் போது எஞ்சியிருக்கும் வாக்குகளாகும்.

7. வெற்றி பெற்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்தல்

ஒவ்வொரு அரசியல் கட்சியும் சுயேட்சைக் குழுக்களும் பெற்றுக் கொண்ட ஆசனங்களின் எண்ணிக்கை கணிப்பிடப்பட்ட பின்னர், குறித்த கட்சிகளின் வேட்பாளர்கள் பெற்ற விருப்புவாக்குகளின் அதி கூடிய தொகைக்கிணங்க பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவர்.

8. தேசியப்பட்டியல் உறுப்பினர் தெரிவு

இலங்கைப் பாராளுமன்றத்திற்கான உறுப்பினர்களுல் 29 பேர் தேசியப் பட்டியல் மூலம் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களாவர். இதன்படி தேசிய ரீதியில் அரசியல் கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் பெற்றுக் கொண்ட வாக்குகளின் விகிதாசாரத்திற்கு ஏற்ப இவ்வுறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். இதற்காக வேட்பு மனுத்தாக்கல் செய்யும் போதே அரசியல் கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் 29 வேட்பாளர்களைக் கொண்டதாக ஒரு தேசியப் பட்டியலைத் தயார் செய்தல் வேண்டும். தேசிய ரீதியில் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்கள் பெற்றுக்கொண்ட வாக்குகளை 29 ஆல் வகுப்பதன் மூலம் தேசியப் பட்டியல் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான குறைந்தபட்ச வாக்கு கணிப்பிடப்படும். இக்குறைந்தபட்ச

வாக்கினைக் கொண்டு தேசிய ரீதியில் ஒவ்வொரு கட்சியும் சுயேட்சைக் குழுவும் பெற்றுக்கொண்ட வாக்குகளை வகுப்பதன் மூலம் கட்சிகளுக்கான மற்றும் சுயேட்சைக் குழுக்களுக்கான தேசியப்பட்டியல் ஆசனங்கள் ஒதுக்கப்படும்.

இம்முறையின் அனுகூலங்கள்

- தேசிய ரீதியில் கட்சிகள் பெற்ற வாக்குகளுக்கும் கிடைக்கப்பெற்ற ஆசணங்களுக்கும் இடையில் நேரடித் தொடர்பிருத்தல்.
- தனிக்கட்சியின் வல்லாட்சி ஏற்படுவதைத் தடுப்பதுடன் எதிர்கட்சியின் நிலையினையும் பலமுல்லதாக்குகின்றது.
- இடைத் தேர்தல்கள் நடாத்தப்படாமையால் செலவு குறைவானது.
- கூட்டரசாங்கங்ள் அமைவதால் கூட்டுச் சேரும் கட்சிகள் தமது விருப்பினை நிறைவேற்றிக் கொள்ள முடிதல்.
- எந்தவொரு கட்சியும் தனிப்பெரும்பான்மையைப் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் யாப்பின் உறுதிப்பாடு பேணப்பட வழி ஏற்பட்டுள்ளது.
- சிறு கட்சிகளும், சிறுபான்மைக் கட்சிகளும் ஆசனங்களைப் பெறும் வாய்ப்பிருத்தல்.
- நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஐதாக வாழும் சிறுபான்மையினரும் தேசிய மட்டத்தில் தங்களது அரசியல் பிரதிநிதித்துவத்தினை தக்கவைப்பதற்கான வாய்ப்பு இம்முறைமையில் காணப்படுதல்.

இம்முறையின் பிரதிகூலங்கள்

1. விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கோட்பாட்டு ரீதியான குறைபாடுகள்
   - பல கட்சி முறையின் வளர்ச்சிக்கு வழிவகுக்கின்றது.
   - அரசியல் உறுதிப்பாடு பலவீனமடையக் காரணமாக அமையும் (கூட்டரசாங்கம், கூட்டு எதிர்க்கட்சிகள்)
   - அரசியல் கட்சிகளின் தலைமைத்துவ ஆதிக்கம் வளர்ச்சியுறல்.
   - வாக்காளர்களுக்கும் பிரதிநிதிகளுக்கும் இடையில் நீண்ட இடைவெளி ஏற்படல்.
   - இடைத் தேர்தல்கள் இன்மையால் இரு தேர்தல்களுக்கு இடைப்பட்ட காலத்தில் மக்களின் பொதுஜன அபிப்பிராயத்தை அறியமுடியாத நிலை ஏற்படும்.
   - நீண்டகால ரீதியான நிலையான அரசியல், பொருளாதாரக் கொள்கையினைக் கடைப்பிடித்து அரசாங்கம் செயற்பட முடியாமை.

2. இலங்கையோடு தொடர்பான விகிதாசாரப் பிரதிநித்துவ முறையின் குறைபாடுகள்

   - தேர்தல் தொகுதி விசாலமானதாகையால் தேர்தல்களை ஒழுங்குபடுத்துவது கடினம்.
   - விருப்பு வாக்குமுறை பல பிரச்சினைகளுக்கு வழிவிடுகின்றது.
     - செலவு அதிகரித்தல், வேட்பாளர்களின் தேர்தல் தொகுதி முழுவதும் பிரச்சாரம் செய்ய வேண்டி ஏற்படல்
     - விருப்புவாக்கினைப் பெறும் நோக்கில் ஒரே கட்சியைச் சேர்ந்த வேட்பாளர்களிடையே மோதல் ஏற்படல்.
     - சில வாக்களிப்புப் பிரதேசங்களுக்கு பிரதிநிதி எவரும் தெரிவு செய்யப்படாத நிலை ஏற்படலாம்.
     - கட்சியின் சிரேஸ்ட தலைவர்களுக்கு அதிக நன்மை ஏற்படுதல்.

- பொருளாதாரக் காரணிகள் மீது அதிக தாக்கத்தினை ஏற்படுத்தும்.

- சிறிய கட்சிகளின் செல்வாக்கு அதிகரித்தல்.
  - சிறிய கட்சிகள் அரசாங்கத்தினை உருவாக்குவதிலும் வீழ்த்துவதிலும் கருவியாகச் செயற்படல்.
  - சிறிய கட்சிகள் பலம்பெறுவதால் தேசிய ஒருமைப்பாட்டுப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன.
  - இனம், பிரதேசம், சமயம், சாதி அடிப்படையில் சிறிய குழுக்களாகப் பிரியும் போக்கு வளர்ச்சியடைதல்.

www.lkedu.lk